## போதைப் பொருள் ஒழிப்பில் சிறப்பான பணி: காவல் அதிகாரிகள், காவலர்கள் 5 பேருக்கு முதல்வர் பதக்கம்



சென்னை: சர்வதேச போதை ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் தடுப்பு தினத்தையொட்டி 5 காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு முதல்வர் பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், 09.05.2022 அன்று சட்டப்பேரவையில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கையிலன் போது "சமூகத்தில் போதைப் பொருளை ஒழிப்பதற்காக கடுமையாகவும், உண்மையாகவும் உழைக்கும் அதிகாரிகள் / காவலர்களை ஊக்குவிப்பதற்கென முதல்வர் பதக்கம் புதிதாக வழங்கப்படும் என அறிவித்தார். அதனைத் தொடர்ந்து 03.08.2022 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக காவல் துறை தலைமை இயக்குநரின் பரிந்துறைக்கேற்ப 5 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு முதல்வர் பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருதுகள் சுதந்திர தின விழாவில் வழங்கப்படும்.

இதன்படி, வெ.பத்ரிநாராயணன், இ.கா.ப (காவல் கண்காணிப்பாளர், கோவை மாவட்டம்), டோங்கரே பிரவின் உமேஷ், இ.கா.ப (காவல் கண்காணிப்பாளர், தேனி மாவட்டம்), மா.குணசேகரன், காவல் துணை கண்காணிப்பாளர் (இருப்பு பாதை, சேலம் உட்கோட்டம்), சு.முருகன் (காவல் சார்பு ஆய்வாளர், நாமக்கல் மாவட்டம்), இரா.குமார் ( முதல் நிலை காவலர்-1380, நாமக்கல் மாவட்டம்) ஆகிய 5 பேருக்கும் முதல்வர் பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோத கடத்தலை ஒழிப்பதில் அஸ்ரா கர்க்கின் (காவல்துறைத் தலைவர், தென் மண்டலம், மதுரை) பணியை அங்கீகரித்து அவருக்கு ரொக்கப் பரிசு இல்லாமல், "சிறப்பு பதக்கம்" தனி நேர்வாக வழங்கப்படுகிறது. இவர்கள் செய்த பணியின் விவரம்:

EVA STALIN IAS ACADEMY

**அஸ்ரா கர்க்**: இவரின் தனிப்பட்ட முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பு மிகுந்த கண்காணிப்பின் மூலம் போதை மருந்துகள் மற்றும் மனநோய் பொருள்கள் (NDPS Act) சட்டத்தின் கீழ் குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளின் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் முடக்கப்பட்டள்ளன. மூத்த அதிகாரிகளுக்கு அவர் பயிற்சி அளித்துள்ளார் மற்றும் 2022-2023ல் 1843 நபர்கள் பிணைக்கப்பட்டுள்ளனர். இது சமூகத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உருவாக்கியது.

**வெ.பத்ரிநாராயணன்**: போதை பொருட்கள் பயன்பாட்டிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளினால், போதை பொருட்கள் இல்லாத கோவை மாவட்டத்தை உருவாக்க சீரிய முயற்சிகள் எடுத்துள்ளார். இம்மாவட்டத்தில் இவருடைய தீவிர முயற்சிகளின் காரணமாக 128 கல்லூரிகளில் போதை பொருட்களுக்கு எதிரான குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருட்கள், புதிய தலைமுறை செயற்கை போதை பொருட்கள், கஞ்சா சாக்லேட்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. 2022-ம் ஆண்டு மட்டும், போதை பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் கஞ்சா வியாபாரிகள் பலர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது நீதிமன்றங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரத்தில், கிராம பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் பொதுமக்களை ஈடுபடுத்தியதின் விளைவாக, கோவை மாவட்டத்திலுள்ள 108 கிராம பஞ்சாயத்துகள் கஞ்சா இல்லாத கிராமங்களாக மாற்றப்பட்டுள்ளன.

**டோங்கரே பிரவின் உமேஷ்**: திருவெறும்பூரில் உதவி காவல் கண்காணிப்பாளராக பணியாற்றிய போது, கரூரில் சிறப்பு சோதனை மூலம் நன்கு வளர்ந்த சுமார் 2,790 கிலோ எடையுள்ள 3,584 கஞ்சா செடிகள் இவரால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றிய போது போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் மொத்தம் 320 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அதில் 10 வணிக வழக்குகளும் அடங்கும். 540 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அதில் 69 குற்றவாளிகள் "போதைப் பொருள் குற்றவாளிகள்" என்று குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 2,266.90 கிலோ கிராம் எடையுள்ள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 98 பாட்டில்கள் MEPHENTERMINE SULPHATE INJECTION IP கைப்பற்றப்பட்டுள்ளன. தேனி மாவட்டத்தில் இதுவரை போதைப்பொருள் கடத்தல்காரர்களின் 345 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

**குணசேகரன்**: இவரது தலைமையில் தனிப்படை அமைத்து ரயில் வண்டிகளில் தீவிர சோதனை மேற்கொண்டதில் ”கஞ்சா வேட்டை 2.0” மற்றும் ”கஞ்சா வேட்டை 3.0”-ன்போது கஞ்சா கடத்தலில் தொடர்ந்து ஈடுபட்ட பல குற்றவாளிகளை குண்டர்தடுப்பு சட்டத்தின்கீழ் கைது செய்து சிறையில்

அடைத்துள்ளார். கடந்த 2022-ம் ஆண்டு 1119 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டு 77 குற்றவாளிகளை கைதுசெய்து 131 வழக்குகள் பதிவு செய்துள்ளார்.

முருகன் மற்றும் குமார்: இருவரும் காவல் கண்காணிப்பாளர், நாமக்கல் மாவட்டம். காவல் துணை கண்காணிப்பாளர், நாமக்கல் உட்கோட்டம் தலைமையில் அமைக்கப்பட்ட தனிப்படையில் குற்றவாளிகளை அடையாளம் காண அதிக முயற்சிகளை எடுத்து தமிழகத்தில் 10 மாவட்டங்களில் ஆதாரங்களை சேகரித்தும், ஆந்திரா மற்றும் தெலுங்கானாவிற்கு பயணம் செய்து ஆதாரங்களை திரட்டியும் குட்கா போதைப் பொருட்களை பறிமுதல் செய்ய உதவியாக இருந்துள்ளார்கள்.

**இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து 21-ம் நூற்றாண்டை சிறந்ததாக மாற்றும் - இந்திய வம்சாவளியினர் கூட்டத்தில் பிரதமர் உறுதி**



**வாஷிங்டன்:** இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து 21-ம் நூற்றாண்டை, மிகச் சிறந்த நூற்றாண்டாக மாற்றும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய வம்சாவளியினரின் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது: இந்தியா, அமெரிக்கா இடையிலான உறவில் புதிய அத்தியாயம் தொடங்கி உள்ளது.

உலக ஜனநாயகத்தின் தாயாக இந்தியா விளங்குகிறது. நவீன ஜனநாயகத்தின் பாதுகாவலனாக அமெரிக்கா செயல்படுகிறது.

இரு நாடுகளும் இணைந்து கொள்கைகள், ஒப்பந்தங்களை மட்டும் உருவாக்கவில்லை. மக்களின் வாழ்க்கையை வளமாக்குகிறோம். அவர்களின் கனவுகளை நனவாக்குகிறோம். புதியதொரு விதியைப் படைக்கிறோம். இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து 21-ம் நூற்றாண்டை, மிகச் சிறந்த நூற்றாண்டாக மாற்றும். இதில் அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளியினர் முக்கிய பங்காற்றுவார்கள்.

இந்தியாவில் வறுமை வேகமாக ஒழிந்து வருகிறது. 140 கோடி இந்தியர்களின் தன்னம்பிக்கையால் இந்தியா அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. இந்தியாவின் முன்னணி விமான போக்குவரத்து நிறுவனங்கள், அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து நூற்றுக்கணக்கான விமானங்களை வாங்க ஒப்பந்தம் செய்துள்ளன. இதன்மூலம் அமெரிக்காவில் வேலைவாய்ப்பு பெருகி வருகிறது.

**100 கலை பொக்கிஷங்கள்:** எச்1பி விசா தொடர்பாக புதிய திட்டத்தை அமெரிக்க வெளியுறவுத் துறை வரையறுத்து வருகிறது. இதன்படி அமெரிக்காவிலேயே எச்1பி விசாவைப் புதுப்பித்து கொள்ள முடியும். இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு கடத்தப்பட்ட 100 கலைபொக்கிஷங்களை திருப்பி வழங்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக அமெரிக்க அரசுக்கு மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

**எகிப்தில் மோடிக்கு வரவேற்பு:** அமெரிக்க சுற்றுப் பயணத்தை நிறைவு செய்த பிரதமர் மோடி நேற்று எகிப்து சென்றார். தலைநகர் கெய்ரோ விமான நிலையத்தில் அந்த நாட்டு பிரதமர் முஸ்தபா மேட்போலி நேரடியாக வந்து பிரதமர் மோடியை வரவேற்றார்.

சுமார் 26 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய பிரதமர் எகிப்துக்கு செல்கிறார். எகிப்தில் முதல்முறையாக பயணம் செய்யும் பிரதமர் நரேந்திர மோடி அந்த நாட்டு அதிபர் அப்தெல் ஃபத்தா அல் சிசியை இன்று சந்தித்துப் பேசுகிறார். அப்போது முக்கிய ஒப்பந்தங்கள் கையெத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹூஸ்டன் பல்கலை.,யில் இந்திய அரசு உதவியுடன் தமிழ் இருக்கை - அமெரிக்காவில் பிரதமர் மோடி பெருமிதம்



**புதுடெல்லி:** உலகின் மூத்த மொழி தமிழ் என அமெரிக்காவில் பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். ஹுஸ்டன் பல்கலைக்கழகத்தில் இந்திய அரசின் உதவியுடன் தமிழுக்கான இருக்கை அமைக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் நடைபெற்ற ‘காசி தமிழ்ச் சங்கமம்’ நிகழ்ச்சி முதலாக ‘உலகின் மூத்த மொழி தமிழ்’ என்று பிரதமர் மோடி குறிப்பிட்டு வருகிறார். இதுவரை தனது இந்திய நிகழ்ச்சிகளில் மட்டும் இதைக் கூறிவந்த அவர், வெளிநாடுகளிலும் இதை பேசத் தொடங்கியுள்ளார்.

இந்தவகையில், சமீபத்தில் தனது அமெரிக்கப் பயண நிகழ்ச்சியில் பல ஆயிரம் பேர் முன்னிலையில் உரையாற்றிய பிரதமர் மோடி, உலகின் மூத்த மொழி தமிழ் என்ற பெருமை இந்தியர்களுக்கு இருப்பதாகக் குறிப்பிட்டார்.

இதுகுறித்து வாஷிங்டனில் பிரதமர் மோடி தனது உரையில் குறிப்பிடுகையில், “இந்திய அரசின் உதவியுடன் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் கல்விக்காக ஓர் இருக்கை அமைக்கப்பட உள்ளது. இந்த இருக்கையால் தமிழ் கலாச்சாரம் மற்றும் உலகின் மூத்த மொழியான தமிழைப் பரப்புவதில் கூடுதலான பலன்கள் கிடைக்கும். உங்கள் அனைவருக்கும் எனது சார்பில் ஒரு கோரிக்கை வைக்கிறேன்.

மொழிகளை பற்றிய விவாதம் உங்கள் முன் எழும்போது, உலக மனித சமுதாயத்தின் முதல் மொழி தமிழ்தான் என்று அனைவரின் முன் நெஞ்சை நிமிர்த்திக் கூறுங்கள். அனைத்தையும் விடப் பழமையான மொழி தமிழ் மட்டுமே. அது எங்கள் மொழி ஆகும்” என தனது மார்பில் கையை தட்டி உற்சாகமாகத் தெரிவித்தார்.

பிரதமர் மோடி தனது உரையில் தமிழைப் பற்றிப் பேசிய காட்சிப் பதிவு, அமெரிக்காவில் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த உரையில் பிரதமர் மோடி குறிப்பிட்ட தமிழ் இருக்கைக்கான தேவை பல வருடங்களாக வலியுறுத்தப்படுகிறது.

இதன்மூலம், டெக்சாஸ் மாநிலத்தின் ஹூஸ்டன் நகரில் வாழும் பல லட்சம் தமிழர்கள் பலனடைவார்கள். ஹூஸ்டன் தமிழர்கள் தங்கள் உழைப்பின் ஒரு பகுதியை மூலதனமாக்கி தமிழ் இருக்கை அமைக்க முயற்சித்தனர்.

இவர்களுடன் அமெரிக்கத் தமிழர்களும் இணைந்துகொண்ட பின், உலகம் முழுவதிலும் இருந்தும் நன்கொடைகள் வசூலிக்கப்பட்டு வந்தன. இதற்காக, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலினும் ரூ.2.5 கோடி நன்கொடை அளித்து அவர்களை உற்சாகப்படுத்தினார்.

இதற்கிடையே மத்திய அரசு சார்பில் இந்திய கலாச்சார உறவு கவுன்சில் (ஐசிசிஆர்) ஹூஸ்டனில் தமிழ் இருக்கையை தொடங்கும் பணியில் இறங்கியது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்துடன் சமீபத்தில் போடப்பட்டது.

இதையடுத்து பேராசிரியருக்கான விளம்பரம் அளித்து நேர்முகத்தேர்வும் நடத்தப்பட்டது. இதில், கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியரான டி.விஜயலட்சுமி வருகைதருப் பேராசிரியராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஹூஸ்டன் தமிழ் இருக்கையுடன் சேர்த்து, வெளிநாடுகளில் ஐசிசிஆர் அமைப்பின் தமிழ் இருக்கை 3 ஆக உயருகிறது. ஏற்கெனவே, போலந்தில் இதன் சார்பில் இரண்டு தமிழ் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## தெற்காசிய கால்பந்து - இந்தியா அபாரம்




**பெங்களூரு**: தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பு சாம்பியன்ஷிப் தொடரில் இந்திய அணி 2-0 என்ற கோல் கணக்கில் நேபாள அணியை வீழ்த்தியது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி நேபாளத்துடன் மோதியது.

இந்த ஆட்டத்தில் இந்திய அணி சிறப்பாக விளையாடி 2 கோல்களை அடித்தது. இந்திய அணி சார்பில் கேப்டன் சுனில் சேத்ரி 61-வது நிமிடத்திலும், நரோம் மகேஷ் சிங் 70- வது நிமிடத்திலும் தலா ஒரு கோலடித்தனர். இறுதி வரை இந்த நிலை நீடிக்கவே இந்தியா 2-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றியைப் பதிவு செய்தது.